செய்தி வெளியீடு எண்: 514 நாள்: 09.03.2024

<u>செய்தி வெளியீடு</u>

**பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் கூடுதல் சுற்றுலா மாளிகை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகை மற்றும் தேனியில் 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகை ஆகியவற்றை திறந்து வைத்தார்,

**சாத்தூரில் கட்டப்பட்டுள்ள புதிய சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்**

2021–22ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் நகரில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, விருதுநகர் மாவட்டம், சாத்தூரில் 2 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், இரண்டு தளங்களுடன், 4437 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சுற்றுலா மாளிகையானது, தரைத்தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், கூட்ட அரங்கம், பொது உணவுக்கூடம், ஓட்டுநர் ஓய்வறை மற்றும் முதல் தளத்தில் இரண்டு வரவேற்பு அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள், இரண்டு தங்கும் அறைகள் மற்றும் காத்திருப்புக்கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**தேனியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை திறந்து வைத்தல்**

தேனி மாவட்டம், தேனி மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் ஏற்கனவே அமையப்பெற்றுள்ள சுற்றுலா மாளிகை கட்டடத்தின் முன்புறம் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டடம் கட்டிட 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5996 சதுர அடி பரப்பளவில் கட்டி

முடிக்கப்பட்டுள்ள கூடுதல் சுற்றுலா மாளிகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்கட்டடத்தின் தரைதளத்தில் குளிர்சாதன வசதியுடன் முக்கியஸ்தர்களுக்கான நான்கு அறைகளும், விருந்தினர்களுக்கான நான்கு அறைகளும், என மொத்தம் எட்டு அறைகள், சமையலறை, உணவருந்தும் அறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கூடுதல் சுற்றுலா மாளிகையானது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நீதியரசர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் தங்குவதற்காக உரிய வசதிகளுடன் இயற்கை சூழலுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

...........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in